

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் இந்தியா கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., செந்தில்குமார், குமாரசாமி, ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மகன் சஞ்சய் சம்பத் ஆகியோர் இருந்தனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் வருகிற 21ம் தேதி முதல்வர் வருகையினை முன்னிட்டு நடைபெறும் பணிகள் தமிழ் நூலக கட்டிடத்தினை அமைச்சர்கள் கேஆர்.பெரியகருப்பன் முனைவர் கோவி..செழியன் ஆகியோர் பார்வையிட்டு ஆலோசனை நடத்தினார்கள். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் , எம்.எல்.ஏக்கள் எஸ்.மாங்குடி, திருமதி தமிழரசி ரவிக்குமார் ,மேயர் எஸ்.முத்துதுரை, துணைமேயர் நா.குணசேகரன், பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ரவி, மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன் ஆகியோர் உள்ளனர்.

### குமரி கண்ணாடிப் பாலத்தை

# 3 நாட்களில் 31 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டு பெருமிதம்!

**கன்னியாகுமரி, ஜன. 18 -**

**பொங்கல் விடுமுறையை முன்னிட்டு, கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறை நினைவகம் மற்றும் திருவள்ளுவர் சிலைக்கு கடந்த மூன்று நாட்களாக 31,000க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.**

37 கோடி ரூபாயில் கட்டப்பட்ட கண்ணாடிப் பாலத்தை 2024 டிசம்பர் 30ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்களுக்காக திறந்து வைத்தார். விவேகானந்தர் பாறை நினைவிடத்திற்கு படகில் செல்ல அதிகாலை முதலே சுற்றுலா பயணிகள் வரிசையில் நிற்கத் தொடங்கினர்.

கடலில் தூண்கள் ஏதும் இல்லாமல் ஆர்ச் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது இந்த கண்ணாடி பாலம். பாலத்தில் நடந்து செல்லும் பகுதியில் இருபுறமும் காங்கிரீட் பகுதிகளும் நடுவே கண்ணாடியால் ஆன பகுதியும் இடம் பெற்றுள்ளது. கண்ணாடியில் நடக்க விரும்பாதவர்கள் காங்கிரீட் பகுதியில் நடந்தவாறு கண்ணாடியில் கடலின் அலைகளை ரசித்து செல்லலாம். 53 மி.மீ தடிமனில் கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது. இது கடினப்படுத்தப்பட்ட கண்ணாடி ஆகும். தற்போது அதன் மீதுதான் சுற்றுலா பயணிகள் நடந்து செல்கின்றனர். கொளுத்தும் வெயிலிலும் இந்த கண்ணாடி சூடு ஆவது இல்லை. இதனால் வெயில் காலத்திலும், மழைக்காலத்திலும் இதன் மீது பாதுகாப்பாக நடந்து செல்ல முடியும். கடல்நடுவே அமைக்கப்பட்டுள்ள நாட்டின் முதல் கண்ணாடி பாலம் இது ஆகும்.

## கழக அரசுக்கு பாராட்டு!



பொங்கல் கொண்டாட்டத்தையொட்டி கன்னியாகுமரியில் சுற்றுலா பயணிகள் குவிந்த வண்ணம் உள்ளனர். அவர்கள் கடல்நடுவே அமையப்பெற்றுள்ள கண்ணாடி பாலத்தை பார்வையிடுவதிலும் அதில் நடந்து செல்வதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். நாள் ஒன்றுக்கு 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்த கண்ணாடி பாலத்தை பார்வையிடுவது குறிப்பிடத்தக்கது. இது வரை 3 நாட்களில் 31 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பார்வையிட்டுள்ளனர்.

கன்னியாகுமரி கண்ணாடி பாலத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கன்னியாகுமரி ஆட்சியர் அழகுமீனா வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

படகில் திரும்பிய குஜராத்தைச் சேர்ந்த லதா ஷா என்ற சுற்றுலாப் பயணி இடங்களைப் பார்வையிட்ட பிறகு, “கண்ணாடிப் பாலம் ஒரு அற்புதமான சுற்றுலாத் தலமாகும். இது மிகவும் சிறப்பாக உள்ளது. புதிதாகக் கட்டப்பட்ட கண்ணாடிப் பாலத்தின் வழியாக நடப்பது ஒரு மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது.

குழந்தைகள், குறிப்பாக நானும் மிகவும் ரசித்தேன். பாறை நினைவுச்சின்னம் அல்லது சிலைக்கு அருகில் விற்பனையாளர்கள் தின்பண்டங்கள் மற்றும் பானங்களை விற்பனை செய்தால் நன்றாக இருக்கும், ஏனெனில் குழந்தைகள் நீண்ட நேரம் காத்திருந்த பிறகு பசியை உணரலாம்,” எனத் தெரிவித்தார்.

### இந்தியாவில் முதல் முறையாக

# சென்னையில் இரவு நேர கார் பந்தயம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு நடிகர் அஜித் குமார் நன்றி!


துபாய்,ஜன.18-

நடிகர் அஜித் குமார் ‘அஜித் குமார் ரேசிங்’ (Ajith Kumar Racing) என்ற பெயரில் தமது தலைமையில் ஓர் அணியை உருவாக்கியுள்ளார். இந்த அணி ஜனவரி 12ஆம் தேதி துபாயில் நடைபெற்ற ‘24H Dubai 2025’ சர்வதேச கார் பந்தயத்தில் பங்கேற்று மூன்றாவது இடம் பிடித்து வெற்றி பெற்றது. இது அஜித் ரசிகர்களுக்கிடையே மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது.

இந்த வெற்றியை அஜித் குமார் இந்தியக் கொடியுடன் கொண்டாடிய சம்பவம் ரசிகர்களுக்கு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அதுமட்டுமல்லாது, அவரது மகன், மகள் மற்றும் மனைவி ஷாலினியுடன் அவர் இருந்த வீடியோ காட்சிகள் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

தமிழ்நாடு அரசுக்கு நன்றி:

இந்த நிலையில், அஜித் குமார் தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.



இது குறித்து நேர்காகாணல் ஒன்றிற்கு பேட்டியளித்த அஜித் குமார், **“தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக, சென்னையில் முதல் முறையாக கார் பந்தயம் நடைபெற்றுள்ளது. அதுவும் அவை இரவுநேர போட்டியாக நடந்துள்ளது. இத்தகைய கார் பந்தயத்தை நடத்தி சாத்தியப்படுத்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு நன்றி.**

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில்

# பேருந்து வழித்தடம் நீட்டிப்பு ! கூடுதல் பேருந்துகள் இயக்கம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

*அரியலூர், ஜன,18*

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலத்தின் சார்பில் போக்குவரத்து பேருந்து சேவையினை நீட்டிப்பு செய்து, கூடுதல் நடை பேருந்துகளை துவக்கி வைத்து, புதிய வழிதடத்தில் பேருந்து சேவையினை நேற்று( கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொது மக்களின் நலன் கருதி எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில், பொதுமக்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், மாணாக்கர்கள் உள்ளிட்டோர் பயன்பெறும் வகையில் அரசு பேருந்து சேவை செயல்பட்டு வருகிறது.

பேருந்து நீட்டிப்பு சேவையினை துவக்கி வைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிற்கிணங்க, பேருந்து வசதி இல்லாத பகுதிகளிலும் பேருந்து சேவையினை தொடங்கி வைக்கும் விதமாக இன்றையதினம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட், திருச்சி மண்டலம், அரியலூர் கிளை புறநகரப் பேருந்து மற்றும் கும்பகோணம் மண்டலம் திருவையாறு கிளை நகரப் பேருந்துகள் மூலம் அரியலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேலராமநல்லூர் கிராமத்தில் பேருந்து நீட்டிப்பு சேவை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி தடம் எண்.602A புறநகர், காலை 7.20 மணிக்கு திருமானூர் தூத்தூர் (மேலராமநல்லூர், ஏலாக்குறிச்சி வழியாக) மற்றும் மாலை 6.40 மணிக்கு தஞ்சாவூர் தூத்தூர் (திருமானூர், விழுப்பணங்குறிச்சி, மேலராமநல்லூர் வழியாக), இதேபோன்று, தடம் எண். B59 நகர், காலை 5.50 மணிக்கு திருவையாறு மேலராமநல்லூர் (ஏலாக்குறிச்சி வழியாக), மாலை 5.15 மணிக்கு திருவையாறு மேலராமநல்லூர் (ஏலாக்குறிச்சி வழியாக) பேருந்து சேவையினை நீட்டிப்பு செய்யபட்டுள்ளது.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் கல்வி பயில்வதற்கு தடை ஏற்படாமல் பேருந்து சேவை வழங்கப்பட்டு வருகிறது. பிற மாநிலங்களை காட்டிலும் தமிழ்நாட்டில் அரசு போக்குவரத்து கழகத்தில் சுமார் 20,000 பேருந்து சேவைகள் பயன்பாட்டில் உள்ளது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி பொங்கல் திருநாளை முன்னிட்டு சென்னையில் உள்ள மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல சிறப்பு பேருந்துகள் கடந்த மூன்று நாட்களாக இயக்கப்பட்டு வருகிறது. இந்த சிறப்பு பேருந்துகள் மூலம் கடந்த மூன்று நாட்களில் 6 லட்சத்து 40 ஆயிரத்து 465 பேர் தங்களது சொந்த ஊர்களுக்கு சென்றுள்ளனர். மேலும் 7 லட்சத்து 70 ஆயிரம் நபர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொங்கல் திருநாளை முன்னிட்டு கூடுதலாக தனியார் பேருந்துகளும் ஒப்பந்த அடிப்படையில் இயக்கப்பட்டு வருகிறது. இதனால் கிராமங்கள் மற்றும் நகரங்களில் இயக்கப்படும் பேருந்துகளை சிறப்பு பேருந்துகளாக இயக்கப்படுவதை தவிர்த்து பேருந்துகள் கிராம நகரங்களில் வழக்கம் போல இயக்கப்பட்டு வருகிறது. இதனால் பொதுமக்களின் போக்குவரத்து எளிமையாக்கப்பட்டுள்ளது. எனவே பொங்கல் திருநாளுக்காக சென்னை உள்ளிட்ட பல்வேறு மாநகரங்களில் இருந்து மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல போதுமான அளவிற்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், அவர்கள் பேசினார்.

அதனைத்தொடர்ந்து. அரியலூர் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட ★விக்கிரமங்கலம்★ கிராமத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட், திருச்சி மண்டலம், அரியலூர் கிளை மூலம் அரியலூரிலிருந்து மாலை நேரங்களில் விக்கிரமங்கலம் வழியாக காரைக்குறிச்சி செல்ல பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தடம் எண்.608H புறநகர், மாலை 4.00 மணிக்கு அரியலூர் கும்பகோணம் (வி.கைகாட்டி, விக்கிரமங்கலம், முட்டுவாஞ்சேரி, காரைக்குறிச்சி வழியாக), மாலை 6.00 மணிக்கு கும்பகோணம் அரியலூர் (காரைக்குறிச்சி, முட்டுவாஞ்சேரி, விக்கிரமங்கலம் வி.கைகாட்டி) புறநகரப் பேருந்து இயக்கத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

பின்னர், குன்னம் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட இரும்புலிக்குறிச்சி கிராமத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம், ஜெயங்கொண்டம் கிளை புறநகரப் பேருந்தின் மூலம் இரும்புலிக்குறிச்சியிலிருந்து ஜெயங்கொண்டம் வழியாக மயிலாடுதுறைக்கு புதிய வழிதடத்தில் பேருந்து இயக்கத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். அதன்படி செந்துறையிலிருந்து காலை 5.05 மணிக்கு புறப்பட்டு இரும்புலிக்குறிச்சி, ஜெயங்கொண்டம் வழியாக காலை 8.10 மணிக்கு மயிலாடுதுறையை சென்றடையும். மீண்டும் காலை 8.20 மணிக்கு புறபட்டு காலை 11.10 மணிக்கு ஜெயங்கொண்டம் வழியாக இரும்புலிக்குறிச்சியை வந்தடையும். மீண்டும் காலை 11.35 மணிக்கு இரும்புலிக்குறிச்சியிலிருந்து புறப்பட்டு, பிற்பகல் 2.10 மணிக்கு மயிலாடுதுறையை சென்றடையும், மீண்டும் பிற்பகல் 2.40 மணிக்கு மயிலாடுதுறையிலிருந்து புறப்பட்டு மாலை 5.40 மணிக்கு இரும்புலிக்குறிச்சியை வந்தடையும். மீண்டும் மாலை 5.55 மணிக்கு இரும்புலிக்குறிச்சியிலிருந்து புறப்பட்டு இரவு 8.10 மணிக்கு மயிலாடுதுறையை சென்றடையும். மீண்டும் 8.20 மணிக்கு மயிலாடுதுறையில் புறப்பட்டு இரவு 11.05 மணிக்கு செந்துறையை வந்தடையும் வகையில் இன்று முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பேருந்து இயக்கம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், மாணாவர்கள், வியாபாரிகள் இப்பேருந்து வசதியினை தொடர்ந்து பயன்படுத்தி முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டல பொது மேலாளர் ஆ. முத்துக்கிருஷ்ணன், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, அரியலூர் வட்டாட்சியர் முத்துலெட்சுமி. ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் சம்பத்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகன் (திருமானூர்), பொய்யாமொழி (தா.பழூர்), பிரபாகரன் (செந்துறை), ஜாகிர் உசைன் (செந்துறை), தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக அலுவலர்கள், மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் இரா.கென்னடி, பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், தனவேல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் செ.இளஞ்செழியன், தொமுச மத்திய தொழில்சங்க தலைவர் சேகர், அரியலூர் தொமுச செயலாளர் பி.வி.அன்பழகன், தொமுச நிர்வாகிகள் கொளஞ்சி, செல்வம், குமார், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, இரும்புலிக்குறிச்சி கிராமத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலத்தின் சார்பில் இரும்புலிக்குறிச்சி மயிலாடுதுறை பேருந்து சேவையினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா அவர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### பொங்கல் பண்டிகை:

# அரசுப் பேருந்துகளில் 8.73 லட்சம் பேர் பயணம்!

சென்னை,ஜன.18-

பொங்கலையொட்டி அரசுப் பேருந்துகளில் 8.73 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.



பொங்கலையொட்டி அரசுப் பேருந்துகளில் 8.73 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

ஜன.10 முதல் 13 வரையிலான 4 நாள்களில் இயக்கப்பட்ட 15,866 பேருந்துகளில் 8.73 லட்சம் பேர் பயணித்துள்ளனர் என்றும் விடுமுறை முடிந்து திரும்புவதற்காக ஜன.19 வரை 22,676 பேருந்துகள் இயக்கப்பட உள்ளன என்றும் தமிழ்நாடு அரசு குறிப்பிட்டுள்ளது.

மேலும் கடைசிநேர கூட்ட நெரிசலை தவிர்க்க முன்பதிவு செய்து பயணிக்கவும் அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொங்கல் பண்டிகையையொட்டி, சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசித்து வரும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தங்களது சொந்த ஊருக்குச் செல்வதற்கு வசதியாக அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் கடந்த 10ஆம் தேதி முதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன.

இந்த சிறப்பு பேருந்துகளில் நாள்தோறும் ஏராளமானோர் பயணம் மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.